

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (8.3.2024) தலைமைச் செயலகத்தில், அல்ட்ரா டெக் சிமெண்ட் நிறுவனத்தின் தலைவர் இ.ஆர்.ராஜ் நாராயணன் சந்தித்து, முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 1 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, வழக்கறிஞர் கிருஷ்ணா ரவீந்திரன் ஆகியோர் உள்ளனர்.

### டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர் பி.கே.சேகர்பாபு, இரா.கிரிராஜன் எம்.பி. சிறப்புரை!

# 93வது வட்டத்தில் மக்கள் முதல்வரின் மனிதநேயத் திருநாள்! 117 பேருக்கு நலஉதவிகள்!

### எஸ்.உமா எம்.சி. தலைமை – ஜோசப் சாமுவேல், பி.கே.மூர்த்தி, டி.எஸ்.பி. இராஜகோபால் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 9

சென்னை கிழக்கு மாவட்டம், அம்பத்தூர் தெற்குப் பகுதி 93வது வட்ட தி.மு.க. சார்பில் மார்ச்-1 மக்கள் முதல்வரின் மனிதநேயத் திருநாள், பக்குவம் பெற்ற தலைவர்! பகிர்ந்து கொடுக்கும் முதல்வர் என்ற தலைப்பில் சூரியத் தொடர் 58வது நிகழ்ச்சி இன்று 09.03.2024 சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு, முகப்பேர் கிழக்கு, கோல்டன் ஜார்ஜ் நகர், நீதிபதி ரத்தினவேல் பாண்டியன் சாலையில் உள்ள ஏ.எஸ். என்.சுவர்ணமஹால் திருமண மண்டபத்தில் 93வது வார்டு மாமன்ற உறுப்பினர் எஸ்.உமா எம்.சி. தலைமையில் நடைபெறுகிறது.

தனியார் நிறுவன உணவு விநியோகிப்பாளர்கள் 171 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் இந்நிகழ்ச்சிக்கு, கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், மண்டல குழு தலைவர் பி.கே.மூர்த்தி, அம்பத்தூர் தெற்குப் பகுதி செயலாளர் டி.எஸ்.பி. ராஜகோபால், கிழக்குப் பகுதிச் செயலாளர் எம்.டி.ஆர்.நாகராஜ் மற்றும் ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி., எல்.பி.எப். மோகன், டாக்டர் ஜி.சாந்தகுமாரி எம்.சி., டாக்டர் ஏ.பி.பூர்ணிமா எம்.சி., ஜி.வி.நாகவள்ளி எம்.சி., து.ஆயிரம், ஜெ.பாலமுருகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தனியார் நிறுவன உணவு விநியோகிப்பாளர்கள் 171 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி கழக சட்டதிட்டக்குழு செயலாளர் இரா. கிரிராஜன் எம்.பி. சிறப்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை மாநகராட்சி மேயர் பிரியாராஜன், தாயகம் கவி எம்.எல்.ஏ., வெற்றி அழகன் எம்.எல்.ஏ., இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் பி.டி.சி. செல்வராஜ் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

93வது வட்ட நிர்வாகிகள் இரா.டீக்கா, வட்ட செயலாளர் ஜெ.ராஜி, உதயசங்கர், பா.சதிஷ், பா.விமல்மேரி, பா.சுந்தரம், கி.செந்தில், இ.மு.ஜஹீர் அகமது, எஸ்.பிரகாஷ், எஸ்.அன்புசெல்வன், அ.சுந்தர்ராஜன், எஸ்.அருள்செல்வி, ஜெ. சுகந்தி, வசந்தி ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

மாநில, மாவட்ட, பகுதி கழக, வட்டக்கழக நிர்வாகிகளும், அனைத்து அணிகளின் நிர்வாகிகளும் பங்கேற்று சிறப்பிக்கின்றனர். எஸ்.ராஜா (எ) சௌந்தர்ராஜன் நன்றி கூறுகின்றார்.

### கழக தலைவர் – முதலமைச்சர் பிறந்த நாள் விழா ! ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. ஏற்பாட்டில்

# திரு.வி.க. நகர் வார்டு 73 ல் 2000 குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

### அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழங்குகிறார்!

சென்னை, மார்ச் 9

சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதியில் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் 71வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, கழக அமைப்பு துணைச் செயலாளர் திரு .வி.க நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப. தாயகம்கவி,எம்.எல்.ஏ., ஏற்பாட்டில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்குகிறார்.

திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வார்டு எண் 73 ல் உள்ள பென்சனர்ஸ் லேனில் 700 குடும்பங்களுக்கும் ஸ்டாரன்ஸ் ரோடு 3 வது தெரு ,4 வது தெரு, 5 வது தெரு மற்றும் கெனால் ஓரம் உள்ள பகுதிகளில் வசிக்கும் 300 குடும்பங்களுக்கும்,

வார்டு எண் : 76 - பெரம்பூர் பேரக்ஸ் ரோடு - சி.எஸ். நகர் அருகில் உள்ள குடிசை மாற்று வாரிய குடியிருப்பு மற்றும் குடிசை பகுதியில் உள்ள500குடும்பங்களுக்கும்,

வார்டு எண் : 72 - சாஸ்திரி நகரில் 1 முதல் 22 தெருக்கள் வரை உள்ள 500 குடும்பங்களுக்கும்,

ஆக மொத்தம் மொத்தம்2000 குடும்பங்களுக்கு

அரிசி உள்ளிட்ட மளிகை பொருட்களை நாளை 10/03/2024 காலை 7 மணியளவில் ஸ்டிராஹன்ஸ் ரோடு சாய்பாபா கோவில் அருகில் உள்ள மாநகராட்சி பள்ளியில் கழக அமைப்பு துணைச் செயலாளர் திரு .வி.க நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப. தாயகம்கவி,எம்.எல்.ஏ., அவர்களின் ஏற்பாட்டில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் வழங்குகிறார்.

76 வது வட்டத்தில் உள்ள பெரம்பூர் பேரக்ஸ் ரோடு; சி.எஸ்.நகர் அருகில் உள்ள நகர்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு மற்றும் அதை சுற்றியுள்ள குடிசைப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு வருகின்ற 10/03/2024 காலை 7 மணியளவில்ஸ்டிராஹன்ஸ் ரோடு பள்ளியில் வழங்கப் படுகிறது.

வார்டு எண் 73 ல் உள்ள பென்சனர்ஸ் லேனில் உள்ள 700 குடும்பங்களுக்கு காலை 8 மணியளவில் ஸ்டிராஹன்ஸ் ரோடு பள்ளியில் வழங்கப்படுகிறது.

ஸ்டாரன்ஸ் ரோடு - 3 வது தெரு ,4 வது தெரு, 5 வது தெரு மற்றும் கெனால் ஓரம் உள்ள பகுதிகளில் வசிக்கும் 300 குடும்பங்களுக்கு காலை 9 மணியளவில் ஸ்டிராஹன்ஸ் ரோடு பள்ளியில் வழங்கப்படுகிறது.

அதைப்போலவே 72 வது வட்டம் சாஸ்திரி நகர் ஒன்றாவது தெரு முதல் 22 ஆவது தெரு வரையிலுள்ள 500 குடும்பங்களுக்கு 13/3/2024 அன்று மாலை 5 மணிக்கு டான் பாஸ்கோ பள்ளி வளாகத்தில் வழங்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியாராஜன், கழக அயலக அணி தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதிவீராசாமி, 6வது மண்டல குழு தலைவர் சரிதா மகேஷ்குமார் எம்.சி, திரு.வி.க.நகர் பகுதி கழக செயலாளர்கள் செ.தமிழ் வேந்தன், எம்.சாமிக்கண்ணு, மாவட்ட பொருளாளர் இசட்.ஆசாத் எம்.சி., மாவட்ட இளைஞர்அணி அமைப்பாளர் டி.லோகேஷ், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் ந.துலுக்காணம், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் லயன் பி.உதயசங்கர், பி.ஜெ.துளசிங்கம். மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் எம்.பெரோஸ்கான், மாவட்ட அயலகஅணி அமைப்பாளர் பெரம்பூர் ஆர்.மகேஷ், மாவட்ட நெசவாளர் ஆணி அமைப்பாளர் கா.ராஜ்முகமது. இரா.வீரமணி, மாமன்ற உறுப்பினர்கள் வழக்கறிஞர் மு.சரவணன் எம்.சி., புனிதவதி எத்திராசன் எம்.சி., ரமணி லோகேஷ் எம்.சி., தமிழ் செல்விசிகுமார் எம்.சி.,

வட்ட கழக செயலாளர்கள் பரிமளாசுரேஷ், மா.ருத்ரமூர்த்தி. எம்.ஏ.டீக்கா, எம்.இசட்.அபோய், எம். தமீம்பாய், பொல்லு டி.சுரேஷ்குமார், எஸ்.புஷ்பராஜ், ஜி.கிருஷ்ணகுமார், வி.கே.வெங்கடேசன். எஸ். சசிகுமார், எஸ்.வெங்கடேசன், தெற்கு பகுதி மற்றும் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள் கோவிந்தன்,அ.கருணாநிதி,வனஜா சண்முகம், பி.சுகுமார், இரா.கருணாநிதி, தில்லைகதிரவன், பெரம்பூர்ஆர்.ராஜன், புல்லட்கி.ரமேஷ், அ.புவனவதி கிணார் ஆறுமுகம், க.எழிலன், எஸ்.கே.சிவகுமார், உதயசீலன், மணிமாறன்,பா.பி.தாஸ், சக்திவேல், ஈஸ்வரிகண்ணன், சாந்திமா சிலாமணி, எம்.எஸ்.நிறைமொழி, பி.ஜெகதீஷ், கே.பிரேமா, எம்.கிரிஜா, எஸ்.தியாகராஜன், வி.சங்கர், எஸ்.விஜயமகேந்திரன், மற்றும் மாவட்ட கழக, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள்,அனைத்து அணிகளின் மாவ,பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் பங்கேற்கின்றனர்.



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் 71 வது பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி, 23 வது வட்டத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் எச்.பீர்முகமது, டி.நெல்சன்ராஜ், முத்துவேல் ஆகியோர் ஏற்பாட்டில், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் தலைமையில், வட்டச் செயலாளர் பி. எஸ்.சந்துரு முன்னிலையில் நடைபெற்றது. சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு தாய்மார்களுக்கு புடவை, அறுசுவை உணவு வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் வட்டக் கழக நிர்வாகிகள் து.எழில்குமார், சொ.சரவணன், டி.ராஜாராம், நடராஜன், ராஜா, தீபக், தங்கவேலு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.



நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகர தி.மு.க. சார்பில் நடைபெற்ற "எல்லோருக்கும் எல்லாம் " திராவிட மாடல் நாயகரின் 71வது பிறந்தநாளை விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் நந்திவரம் & கூடுவாஞ்சேரி நகரச் செயலாளர் எம்.கே.டி.கார்த்திக் தலைமையில் நடைபெற்றது. இப்பொதுக்கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், கழக தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி லெனின் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். அருகில் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், நகரச் செயலாளர் ஜெ.சண்முகம், மாவட்ட துணைச் செயலாளர் து.மூர்த்தி, செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் கே.எம்.எஸ்.நாதன், கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சி தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு ஆதரவு!



நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில், தமிழ்நாடு முதலமைச்சர், **கழகத் தலைவர்** அவர்கள் தலைமையிலான தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளின் வெற்றிக்கு பாடுபடுவதாக அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் தமிழ் மாநிலக்குழு பொதுச்செயலாளர் எஸ்.கர்ணன் மற்றும் தேசியச் செயலாளர்கள் எஸ்.சுரேஷ்தேவன், பி.எஸ்.தேவன் மற்றும் மாநில நிர்வாகிகள், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்களை, நேற்று (8.3.2024), காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நேரில் சந்தித்து ஆதரவு தெரிவித்தனர். அதுபோது, இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை உடனிருந்தார்.

### கே.எஸ்.எம். நாதன் தலைமை! அமைச்சர் பி.கே. சேகர்பாபு - தயாநிதி மாறன் எம்.பி. முன்னிலை!

# எழும்பூர் தெற்குப் பகுதியில் ஒன்றியத்தின் முதன்மை! தமிழ்நிலத்தின் புதுமை வாழ்த்தரங்கம்!

### ப.சிதம்பரம் எம்.பி. - ஜி.விஸ்வநாதன் - சுப.வீரபாண்டியன் - அஜய் ரத்னம் சிறப்புரை!

சென்னை, மார்ச் 9-

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் தெற்கு பகுதி தி.மு.க 108 (அ) வட்டம் சார்பில், மார்ச்- 1 மக்கள் முதல்வரின் மனிதநேயத் திருநாள் ஒன்றியத்தின் முதன்மை ! தமிழ்நிலத்தின் புதுமை ! எனும் தலைமைப்பில் புகழரங்கம் சூரியச் சுடர்-60-வது நிகழ்ச்சி இன்று 9.3.2024 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் மலையாள கிளப் ஆடிட்டோரியம் சேத்துப்பட்டில் நடைபெறுகிறது.

கே.எஸ்.எம். நாதன் தலைமையில் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் - அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி. முன்னிலையில், மாபெரும் புகழரங்கம் புகழுரைப்போர் பா. சிதம்பரம், (முன்னாள் ஒன்றிய அமைச்சர்) ஜி. விஸ்வநாதன் (வி.ஐ. டி பல்கலைக் கழகம்), சு.ப. வீரபாண்டியன் (திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைவர்) - (சமூக நீதி கண்காணிப்புக்குழு தலைவர்) அஜய் ரத்னம் (திரைப்பட நடிகர்) ஆகியோர் சிறப்புரையாற்று கின்றனர்.

இந்நிகழ்வில் வி. சுதாகர், சொவேலு, கோ.ஏகப்பன், பா.ஸ்ரீராமலு, கே.எஸ்.எம் நாதன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், ஆர். நிர்மலா தேவி, பரிதிஇளம் சுரிதி, பாத்திமா முஸ்ஸபர், எஸ் ரசூல், டிவி வேலு, எம் மலர்மாறன், கே அன்னபூரணி, எஸ் ஜெகதீசன், வி விஜயகுமார் எஸ் டால்பின் ஹரி , இ மொய்தீன், வான்மதி கதிரவன் உள்பட மாநில மாவட்ட பகுதி வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் கலந்துளகொள்கின்றனர்.

நன்றியுரை எல். சுந்தர்ராஜன்

### கே.கே.மோகன் தலைமையில் ஆர்.ரமேஷ்குமார் முன்னிலையில்

# 172 அ வட்டம் கன்னிகாபுரத்தில் நல உதவிகள் - உணவு!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் - மு.மகேஷ்குமார் - இரா.துரைராஜ் வழங்கல்!

சென்னை, மார்ச் 8-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்த நாள் விழாவையொட்டி இன்று (9.3.2024 - சனிக்கிழமை) 172 அ வட்டம் வேளச்சேரி சாலை கன்னிகாபுரத்தில் நலத்திட்ட உதவிகள் மற்றும் அசைவ உணவு வழங்கும் நிகழ்ச்சி பகுதி இலக்கிய அணி அமைப்பாளர் கே.கே. மோகன் தலைமையிலும், மாவட்டப் பிரதிநிதி வழக்கறிஞர் வே.ரமேஷ்குமார் முன்னிலையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் ஆர். சீனிவாசன், ஆர்.ஸ்ரீதரன், கே.விஜயரங்கன், கே.கோட்டீஸ்வரன், பி.பாஸ்கர், கே.கே.எம்.சிவராமன், கே.கே.தனபால், கண்ணா, எஸ்.சாமுவேல், ஏ.பிரகாஷ், எம்.குமார், ஜே.அரவிந்த், எம்.ஆகாஷ், ஆர்.செபஸ்டின், வி.விவேக், வினோத், உ.வெங்கி. வி.ஜார்ஜ், முருகன், பழனி, அலெக்ஸ், ஆர். பாலன், கோகுல், எம்.பால்ராஜ், பாண்டியன், சி.தனகோட்டி, சுபாஷ், குப்பன், சண்முகம், எம்.ரங்கநாதன், கே.கே.டி.கோபால், எம். சிவராஜ், பி.ரவி, எஸ்.வி. முத்து, கே.ராகவன், சிவா,

கே.கே.எல்.மீனாட்சி, சுந்தரம் ஆகியோர் வரவேற்கின்றனர்.

மாவட்டச் செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் - துணை மேயர் மு.மகேஷ்குமார் , பகுதிச் செயலாளர் - மண்டலக் குழுத் தலைவர் இரா.துரைராஜ், எம்.கிருஷ்ணமூர்த்தி, வட்டச் செயலாளர் எஸ்.ஆர்.செந்தில் ஆகியோர் உணவு- நல உதவிகள் வழங்குகின்றனர்.

இந்நிகழச்சியல் மாவட்டப் பிரதிநிதிகள் ஜி.செல்வராஜ், வி.முருகன், உமாபதி, யோவான், மடுவை பி.பிரகாஷ், மடுவை ஜெயராமன், பு.ஜெயவேல், எஸ். அசேக்குமார், எஸ்.ராமச்சந்திரன், வட்ட நிர்வாகிகள் த.கே.வெங்கடேசன், எஸ். ராஜேந்திரன், டி.வழி விட்டான், பி.பி..நாகராஜ், எஸ். உமா, ஏ.சத்திவேல், எம். நாராயணமூர்த்தி, ஜி.குணசேகர், சி.எச். பென்சிலய்யா, கே.வி. ஜோய், எஸ். ஆசிகஅலி, பரமன், உ.திருவேங்கிடம், ஹேமலதா, மடுவை அன்பு, வெங்கடேசன், எம்.பி.சகாதேவன், அனுமந்தன், தாமு, ஈ.சுரோஷ் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

கன்னிகாபுரம் ஆர்.ராஜீ, தி.திலிபன், ஆர்.ராஜாமணி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் ஆணையின்படி திருவள்ளூர் மாவட்டம் திருத்தணியில் சுப்ரமணியசுவாமி அரசினர் கலைக் கல்லூரியில் மூவலூர் இராமமிர்தம் அம்மையார் புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் பயன் பெற்ற மாணவிகளுக்கு திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ சான்றிதழ்கள் வழங்கினார். உடன் ஒன்றிய கழக செயலாளர் ஆர்த்தி ரவி கூளூர் ராஜேந்திரன் மற்றும் கல்வி முதல்வர் ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் பலர் கலந்துகொண்டனர்.